# காஞ்சி.

நிறுவனர்: அறிஞர் அண்ணா.

21 - 10 - 1973

மலர்: 10 ★ இதழ்: 15


★

உள்ளே......


தீமிதித் திருவிழா
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

அண்ணாவின் உயில்
(தலையங்கம்)

★

குறளமுதம் - 2
(கட்டுரை)

★

மலர்க்கொடியே!
என் மகளே!
(சிறுகதை)

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

## காஞ்சிநகர்க் கலையொளியே!

பாவலர் எழிற்கோவன்

பாரரங்கில் செந்தமிழும் பரந்தோங்கி நிற்பதற்கோர்
பாதையினைக் கண்ட பதியே!
பாசமுடன் பைந்தமிழர் பண்பரசை நிலைநாட்ட
பகலிரவாய் உழைத்த பறையே!
வீரமுடன் பகைவரினை வென்றுகுவித் திட்டதமிழ்
வேந்தரென வந்த விளைவே!
வியப்பறியப் பலமடமை விசைகளினைத் தகர்த்தெரிந்த
வில்லம்பாய் நேர்ந்த விழுதே!
ஆரமுதத் தீந்தமிழ்தேன் அமுதநிலை யாயினிக்கும்
அண்ணாவென் றுன அரசே!
அருமறை யாந்திருக்குறளின் இலக்கணங்கள் அத்தனையும்
அணிந்துயர்ந்த அருமை யுருவே!
காரகன்ற வானகமுங் காணாத தொண்டியலின்
கரைகண்டு நின்ற கருவே!
காஞ்சிநகர்க் கதிரவனாய்க் கனிந்துதமிழ் நாட்டினர்தம்
கடவுளென நிலைத்த கலையே!

நேரற்ற தமிழரசின் நிறையொளியாய் நிற்கின்ற
நிகரற்ற நீதி நிலையே!
நேர்நெறிகள் கொண்டேகும் நெடும்புகழ் மைக்கலைஞர்
நெஞ்சவிளக் கான நிதியே! [தம்
ஊரறியா ஏழையரும் உயர்வுடனே புகழ்கின்ற
உத்தமத்து வித்து மணியே!
உலகறிந்த பேரறிஞர் உதயமென வளர்கின்ற
ஒப்பற்ற உண்மை யொளியே!
போரினிலும் பொதுமையிலும்; பொல்லார்முன்
[பொறுமையிலும்
புகழ்கண்ட பொதிகை மலையே!
பொங்குதமிழ் நாடென்றும் பொன்மயமாய் விளங்க
பொன்மொழிகள் தந்த பொலிவே! [தமிழ்ப்
கார்காலக் கனவுகளின் நாயகனாய்க் கண்டுதினம்
காக்கின்ற கருணை வடிவே!
காஞ்சிநகர்க் கதிரவனாய்க் கனிந்துதமிழ் நாட்டினர்தம்
கடவுளென நிலைத்த கலையே!


விலை: 0-25 காசு

# குறளமுதம் - 2

மு. பி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,

பிறர் செல்வம் முதலிய சிறப்புக்களைக் கண்டு மனமார வாழ்த்த வேண்டும்—மாறாக, அதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில் உழலக் கூடாது.

பிறர் சிறப்பு கண்டு பொறுக்க முடியாமையே பொறாமையாகும். பொறுமைக்கு நேர் எதிர் பொறாமை! பொறுமை கடலினும் பெரிது! பொறாமையோ நஞ்சினும் கொடியது!

“உனக்கு இதுகூடப் பொறுக்க வில்லையா?” என்று சிலரைப் பார்த்துக் கேட்போமே, அந்தச் சிலர்தான் பொறாமைப்பிடியில் சிக்கித் தவிப்பவர்கள்.

நம் அன்றாட வாழ்க்கையில் பலர், பொறாமை கொள்ளும் தவறான போக்கினால், பல குற்றங்கள் நிகழ்வதற்கு வழியமைத்துக் கொடுத்து விடுகிறார்கள்; தம்மையும் அறியாமல் அழுக்காறு எனும் வழுக்கு நிலத்தில் சறுக்கி விழுந்து விடுகிறார்கள்.

அத்தகையவர்களின் கரம் பிடித்துத் தூக்கி நிறுத்தும் உரம் பெற்றவர்தான் வள்ளுவப் பெருந்தகை; திறம் பெற்றதுதான் அவர் வடித்த திருக்குறள் ஆகும்!

மற்றவர்களுக்குக் கிடைக்கும் உயர்வு, சிறப்பு, பெருமை, பெரும்புகழ் கண்டு, பொறாமை கொள்வதால், யாருக்கும் நன்மை இல்லை; தீமைதான் விளையும் என எச்சரிக்கின்றார் வள்ளுவர்.

அதனாற்றான் “அழுக்காறு என ஒரு பாவி” எனக் கடிந்து கூறுகிறார். ஒரு என்பதற்கு ‘ஒப்பிலாத’ எனப் பொருள் உரைப்பர். கொடுமை செய்வதில், பொறாமைக் குணத்திற்கு ஈடுவேறு எதுவுமே இல்லை எனலாம். அதனாற்றான் எரிச்சலின் அடிப்படையில் எழுந்த இழி குணமாம் பொறாமையினை, ‘ஒப்பற்ற பாவி’ என வன்மையாக அழைக்கின்றார். கொடுமையின் மொத்த உருவமாகத் திரியும் கொடியவனை, இக்குவலயமே ‘பாவி’ எனக் கூறும். கொடுமைகளுக்கெல்லாம் மூலகாரணமாய்—குற்றங்களுக்கெல்லாம் செவிலித்தாயாய் விளங்கும் பொறாமையினைப் ‘பாவி’ எனக் கடுமையாகச் சாடுகிறார் வள்ளுவர். ஏன்? இவ்வளவு கடுமை என எண்ணத் தோன்றும்! பலரது வாழ்வைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு, பம்பரமாய்ச் சுழற்றியன்றோ மகிழ்கின்றது, இப் பொறாமைப் பேய்! தெளிந்த நீரோடை போன்ற நெஞ்சங்களையெல்லாம், குழம்பிய குட்டையாகவன்றோ மாற்றுகின்றது, இப் பொறாமைக் குணம்!

அன்றாட வாழ்க்கையில் நாம் காண்பது என்ன? இயற்கையழகை, செயற்கையழகால் பொறுத்துக் கொள்ள இயல்வதில்லை! முழங்கால் அளவு பின்னல் அழகை, முனைந்து கட்டிய கடைச் சவுரியால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. உழைப்பால் முன்னேறிய ஒருவன் உயர்வை உதவாக் கரையாக ஊர் சுற்றும் ஒருவனால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. செல்வத்தால்—புகழால்—பதவியால்—ஒருவனுக்குச் செல்வாக்கு வரும்போது, அவனோடு சேர்ந்திருந்த ஒருவனுக்கே அவனை வாழ்த்த—பாராட்ட மனம் வருவதில்லை. என் செய்வது? பொறாமைக் குணத்தின் கோர தாண்டவத்திற்கு அத்துணை முக்கியத்துவத்தை இவ்வுலகம் அளித்துவிட்டது. அதனாற்றான் அதனைப் ‘பாவி’ எனும் சொல்லால் சினந்து அழைக்கின்றார் வள்ளுவர்.

அந்த அழுக்காறு என்னும் பாவி—ஒப்பற்ற பாவி—ஒருவனுடைய செல்வத்தையே அழிக்கும் ஆற்றலுடையது! அம்மட்டோ! அவனைத் தீயவழியிலும் செலுத்திவிடும் என்கிறார் வள்ளுவர். பொறாமையானது இம்மையில் செல்வத்தைக் கெடுக்கும்; மறுமையில் நகரத்தைக் கொடுக்கும் எனப் பொருள் உரைப்பர் பரிமேலழகர். மறுபிறவியில் அவனை நகரத்தில் செலுத்துகிறதோ இல்லையோ, இப்பிறவிலேயே அவனைத் தீய வழியில் செலுத்தும் ஆற்றல் அழுக்காறு எனும் பாவிக்கு உண்டு எனப் பொருள் கொண்டாலும் அதன் தீமையைக் குறைத்து மதிப்பிட்டதாகக் கருத முடியாது.

பொறாமை உள்ளத்தில் பரந்த மனப்பான்மைக்கு இடமில்லை. பிறர் உயர்வு கண்டு உளமாரப் போற்றவேண்டும் என்ற எண்ணத்திற்கும் இடமில்லை. மணக்கும் முல்லையைப் போல், மல்லிகையைப்போல் மணம் தரவேண்டும் எனக் கனகாம்பரம் நினைக்குமா? நினைத்தாலும் நடக்குமா? பிறர் சிறப்பு கண்டு பாரட்டும் அன்பு உடையவர், அறநெஞ்சம் உடையவர் போல், தானும் பிறரைப் பாராட்ட வேண்டும் எனப் பொறாமை நெஞ்சம் நினைக்குமா? நினைத்தாலும் நடக்குமா?

அத்தகைய பொறாமை நெஞ்சத்தில் நல்லெண்ணம் ஊற்றெடுக்குமா? நல்ல முயற்சி செய்யவேண்டும் என்ற முனைப்பு தோன்றுமா? தோன்றாது! எனில் செல்வம் தோன்றுவது எங்ஙனம்? தோன்றினும் நிலைப்பது எங்ஙனம்? அதைத்தானே சீதேவி—செலவு—மூதேவி வரவு மூலம் முந்தைய குறள் மூலமே விளக்கினார். ஆகையினால், அழுக்காறு, ஒருவன் செல்வத்தை அழிக்கும்; அவனைத் தீய பாதையில் நடைபோடவைக்கும்!

இவ்வுயரிய கருத்து ஒளிபரப்பும் குறள் விளக்கு இதோ:—

“அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்!!

ஆம்! பொறாமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனது செல்வத்தைக் கெடுப்பதோடு அமையாது, அவனைத் தீயவழியிலும் செலுத்திவிடும். செல்வத்தையே கெடுக்கும் பொறாமையினை அறவே நீக்க வேண்டும்!

தீயவழியில் செலுத்தும் பொறாமையினை அடியோடு போக்கவேண்டும்!

வள்ளுவர் வகுத்த குறள் நெறியை வையத்தில் காக்கவேண்டும். வெல்க குறள் நெறி!

---

அடுத்த கிழமை இதழில்

குறளமுதம் - 3

இடம் பெறும்.

“காஞ்சி”

ஆண்டுச் சந்தா ரூ. 16 (மலர் உட்பட) ஆறுமாதச் சந்தா ரூ. 8

மலர் 10 | 21—10—73 | இதழ் 15

# அண்ணாவின் உயில்

நாலு கோடித் தமிழர்களின் எதிர்கால நலனை எண்ணி, இறுதி விருப்பத்தை உயிலாக எழுதி வைத்தவர் பேரறிஞர் அண்ணா ஆவார். மறைவாக எழுதி வைக்காமல், வெளிப்படையாகவே தன் உயிலை எழுதிவைத்த தமிழ் இனத் தலைவர் அவர். இந்நேரம் அன்னாரது இறுதி உயிலை எண்ணிப் பார்த்திடுதல் நமக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

1969 ‘காஞ்சி’ பொங்கல் மலரில் ‘தமிழர் திருநாள்’ என்னும் தலைப்பில் தம்பிக்கு மடல் தீட்டும்போதே, தன் இதய வேட்கையினையும் நாமெல்லாம் அறிந்துகொள்ளும் வகையில் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

“........தமிழக முழுவதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்கான வழிகள் யாவை என்பதுபற்றி ஆய்வாளர்களிடம் அறிவுரை கேட்டுப்பெறுகிறேன்; **திட்டம் பல தீட்டப்படுகின்றன; ஆனால், அவைகளை நிறைவேற்றத் தேவைப்படும் பணம்? இந்தியப் பேரரசிடமல்லவா முறையிட வேண்டியிருக்கிறது.**

“முறையிடுகிறேன் — கனிவும் பணிவும் குறையாமல்—வம்பு வல்லடிப் போக்குத் துளியுமின்றி—ஆனால் கிடைக்கிறதா? நிரம்ப! காரணங்கள்! நியாயங்கள்! வாதங்கள்! எதற்கு? **இவ்வளவுக்குமேல் பணம் தருவதற்கு இல்லை என்பதற்கு!** என் செய்வேன்? அண்ணன் ஏன் எப்போதும் எப்போதும் கவலைப்பட்டபடி இருக்கிறான் என்று தம்பிகள் கேட்கவே செய்கிறார்கள். **நான் கவலைப்படாமல் எப்படி இருக்கமுடியும்?”**

என்னும் பேரறிஞர் அண்ணாவின் கருத்து, எதனை உணர்த்துகிறது? மாநிலங்கள் தங்கள் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்ற இயலாத சூழ்நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தானே, மத்திய அரசு போதுமான அளவுக்குப் பண உதவி அளிப்பதில்லை என்பதனையும் உளவேதனையோடு உரைக்கின்றார் அன்றோ?

பேரறிஞர் அண்ணாவின் கவலைக்குக் காரணமாக இருந்ததும், ‘பணம் தருவதற்கு இல்லை’ என்னும் மத்திய அரசின் பதில்தானே. அதனால்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்னும் கருத்தினை, பேரறிஞர் அண்ணாவின் வழிநின்று பெரிதும் வலியுறுத்தி வருகின்றார் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

அண்மையில், வடபுலம் சென்றிருந்தபோது பேரறிஞர் அண்ணா அவர்களின் இறுதி விருப்பத்திற்கு ஆக்கம் தேடும் வகையில் ஊக்கமுடன் செயல்பட்ட அன்னார் முயற்சியினை நல்லவர்கள் பாராட்டி மகிழ்கின்றனர், நாடாளும் பிரதமருக்கோ, மாறுபட்ட கருத்தாக அது படுகிறது; மாநில சுயாட்சி என்றால் மத்திய அரசைப் பலவீனப்படுத்தும் முயற்சியாகத் தோன்றுகிறது. என் செய்வது?

“மத்திய அரசைப் பலப்படுத்தத்தான் மாநில சுயாட்சி; பலவீனப்படுத்த அல்ல” என்று தெள்ளத் தெளிவாகக் கூறிய பிறகும், மாநில சுயாட்சி விஷமத்தனமானது; தேவையற்றது என்ற முறையற்ற கருத்தினைத் தெரிவித்துள்ளார், இந்தியப் பிரதமர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார், தன் உயிலை.......

**“......ஆகவேதான் மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்களைப் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்பதுபற்றி வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.”**

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்; அதற்காக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் உயில் விஷமத்தனமானதா? தேவையற்றதா? அறிவுள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

“தமிழக முதல்வர் விரும்புவது, சுயாட்சிக்கு **அதிகமானதாகும்**” என்ற கருத்தினையும் மொழிந்துள்ளார், அம்மையார்,

“பிரிவினையைக் கேட்கமாட்டோம்; மாநில சுயாட்சியைக் கேட்காமலும் இருக்கமாட்

டோம்" என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்த பின்பும், சந்தேகம் ஏன் வரவேண்டும். திசை திருப்பும் நோக்கமின்றி, வேறென்ன இருக்க முடியும்? தமிழரின் தனித் தன்மைகளைப் பேசுவதனாலேயே, பிரிவினை விதையைத் தூவுகின்றார்கள் என்று எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? இதற்கும் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன் உயிலில் பதில் தருகிறார்.

"தமிழகத்தின் தனித் தன்மைகள், சிறப்புக்கள் குறித்துப் பேசுவதனையே, இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு பயப்பதாகும் என்று பேசுவார் உளர். இங்குகூட! அங்கு உள்ளவர்கள் அகமகிழ்வார்கள் என்ற நினைப்பினர், **தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச் சிறப்புகள்—என் செய்வது! எப்படி மறைப்பது! எப்படி மறப்பது!......**"

பேரறிஞர் அண்ணாவின் வழிநின்று தமிழகத்தின் தனிச் சிறப்புக்களை எடுத்துரைக்கும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் மட்டும், எங்ஙனம் "சுயாட்சிக்கு அதிகமாகக் கேட்கும்" குற்றத்திற்கு உள்ளாவார்? அதுதான் நமக்குப் புரியவில்லை.

பிரிவினையை விரும்புவதாகக் குற்றம் சாட்டி, மாநில சுயாட்சிக் கொள்கையை அலட்சியப்படுத்த முனைவது எவ்வகையிலும் நியாயமாகாது.

"......யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பாட்டினை எடுத்துக் கூறுவது, பிளவு மனப்பான்மையாமே! யாழ்; காது குடைச்சலை உண்டாக்குகிறது; தேன், குமட்டலைத் தருகிறது; தென்றல் வெப்பத்தை மூட்டுகிறது என்று கூறுவதுபோல அல்லவா இருக்கிறது, **தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் கூறுவது பிளவு மனப்பான்மையை மூட்டிவிடும் என்று கூறுவது?"**

—பேரறிஞர் அண்ணாவின் உயிலன்றோ! அதனாற்றான் இலக்கிய நடை, எடுத்துக்காட்டு, பதில் கூறமுடியாத வாதங்கள்—அனைத்தையும் நம்மால் காணமுடிகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இறுதி உயிலையே, தன் உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்டுவரும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் உலையா முயற்சி வெற்றி பெறுவதாகுக; சலியாத உழைப்புக்கு வெற்றி கிட்டுவதாகுக! மாநில சுயாட்சி மலர்வதாகுக!

பேரறிஞர் அண்ணாவின் இறுதி வேட்கையை நிறைவேற்றிய மனநிறைவை, நாடு பெறுவதாகுக!

"தம்பி! உன்னால் இயன்ற அளவுக்கு, **தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன்.** நீ முயன்றால், முடியாதது இருக்கிறதா!" என்ற பேரறிஞர் அண்ணாவின் ஆணையினைச் சிரமேற் கொண்டு, செயல்படுத்த முனைவோமாக! செந்தமிழ் அன்னையின் சிறப்பினைக் காப்போமாக!

**—மணிவேந்தன்.**

## முத்தாரம் தாராயோ?

**வா. கோ. சந்திரசேகரன்**

நீலவான் ஆடையைப்போல் நானுவேன்—உன்
நெஞ்சினிலே ஓடுகின்ற தேனுவேன்
துள்ளிவருந் தென்றலைப்போல் நீயாவாய்—என்னைத்
தொட்டணைத்துத் தாங்குகின்ற கோதாவாய்

கூந்தலிலேப் பூமுடித்து வந்தாயே—என்னைக்
கொண்டிடவே நீசிரித்து வந்தாயே
அன்னமென நீநடந்து சென்றாயே—உன்னை
ஆண்டிடவே நான்தொடர்ந்து வந்தேனே

அன்புக்கு உருவாக நின்றாயே—நான்
அணைக்க வருங்கால் நீ சென்றாயே
ஆண்மையினை அடக்கி வெல்வாயோ? உன்னை
ஆளுகையில் மயக்கங் கொள்வாயோ?

வானிலவே தேனிலவே வா வா—நெஞ்சந்
தேற்றுவிக்க ஓடிநீ வாவா
கனிமொழியே இனிமொழியே வாவா-மனதைக்
களிப்பில் மூழ்கிடவே வாவா

பொன்வதனம் பெற்றவளே வாவா—விழிப்
பார்வையினைப் போக்கிடவே வாவா
உன்வதனங் கண்டிடவே வந்தேனே—அதன்
உன்னதத்தை கொண்டிடவே போந்தேனே

உன்னிலையை நானுரை மாட்டேனே—அடி
ஊனுறக்கம் அவைவிட்டுக் கேட்டேனே
என்னிலையைச் சற்றுணர்ந்து பாராயோ? ஒரு
இன்அமுத முத்தாரம் தாராயோ?

தம்பி

# தீமிதித் திருவிழா

**அறிஞர் அறிவானந்தர் சொன்ன கதை இது.**

இதிலே, மெய்யமை கருத்தப்பன், பவுனும்பாள் வலைவிரித்தான், கோட்டையூரான் கோலெடுத்தான், வாக்களிப் பார் தெளிவப்பன், நோட்டுரான், இருட்டுரான் என்போர் உளர்.

உதயசூரியன் கோட்டையூர் நுழைவதைத் தடுத்திட சூழ்ச்சி நடத்தப்படுவதும், அது முறியடிக்கப்படுவதும் கதையில் விளக்கப்பட்டிருக்கிறது.

மெய்யம்மையிடம் பவுனும்பாள் தூபம்போட—வருகிற கட்டத்துடன் கதை துவங்குகிறது.

## மெய்யம்மை இல்லம்

போகத்தான் போறேன்; போகத்தான் போறேன்னு சொல்லிக்கொண்டே இருந்தாயே பொழுதுக்கும்; தலையே போறதானுலும் போகம இருக்கப்போறதில்லே தீமிதிக்கற திருவிழாவுக்குன்னு; போகல்லியா, அமக்களமா நடக்குதாமே ஆட்சியூர் தடியெடுத்தான் கோயிலிலே; தீமிதிக்கிற திருவிழா.

போகணும்னு கொள்ளே ஆசைதான். தீமிதிக்கிற திருவிழாவோட வேடிக்கை பார்க்கமட்டுமல்ல, தீமிதிக்கிறதுக்கே ஆசைதான்......

தீ மிதிக்கிறதுக்கா? அடீ ஆத்தே! கால் புண்ணுயிடுமே கண்டவங்க தீமிதிச்சா—மிதிக்கிறவங்க காலெல்லாம் என்ன தீஞ்சாப் போகுது......



அவங்க வேண்டுதலைச் செய்துகொண்டவங்க—விரதம் இருக்கிறவங்க — அவங்களைத் தீ ஒண்ணும் செய்துடாதாம்.

எனக்கு மட்டும் என்னவாம். நானுந்தான், தீ மிதிக்கறதுன்னு தீர்மானிச்சி வைச்சிருக்கிறேன்.

பயம் இல்லையா, உனக்கு...நெஜமாச் சொல்லு, தீயிலே இறங்கத் துணிவு இருக்குதா?

இருக்கிறதாலேதான், சொல்றேன் தீ மிதிச்சே காட்டப்போறேன்னு......

தீர்மானம் செய்துகொண்டிருந்தாச் செய்யத் தான் வேணும்; செய்வதாச் சொல்லிவிட்டுச் செய்யாமப் போனாத்தான், ஏகப்பட்ட பாபமாம், எல்லம்மன் கோயில் பூசாரி ஏழெட்டு நாளைக்கு முன்னாலே சொன்னாரு......

காலையிலே சொன்னாரா, மாலையிலே சொன்னாரா, அந்தப் பேச்சு?

அதென்ன என்னமோ ஒரு தினுசாக் கேட்கறே, காலை வேளையிலா, மாலையிலான்னு......

காரணத்தோடுதான் கேட்கிறேன். அவரோட பேச்சு பொழுதுவிடிஞ்சாப் போச்சி! புரியல்லையா! அட அவன் மொடாக் குடியன்—போதையிலே பேசினாரா, நிதானத்தோட இருந்து பேசினாரான்னு தான் கேட்கிறேன்.

நீ ஒரு குறும்பு! பூஜாரி, நல்ல கட்டுகட்டா விபூதி பூசிக்கிட்டு, குங்குமம் அப்பிக்கிட்டு, சுத்தமா இருக்கிறப்போதான் பேசினாரு. நீ சொல்ற மாதிரியிலே இல்லே. அது கிடக்குது; பொறப்படுறதுன்னா பொழுதோடக் கிளம்பு.

அதைப்பத்தித்தான் யோசிக்கறேன்......

அஞ்சாறு கல் தொலைவு நடக்கவேணுமே, கால் வலிக்குமேன்னு கவலை இருக்கும்......

அந்தக் கவலை கிடையாது—நான் என்ன, மேனா மினுக்கி வாழ்வு நடத்திக்கிட்டா இருக்கறேன், நடந்தா கால் கடுக்க. காடுமேடு சுத்தி உரம் ஏறினதுதான் காலு......ஆனால்......

போறதுக்குள்ளே இருட்டாயிடுமே, அதை எண்ணிப் பயப்படறயா......

அட, அந்தப் பயம் எல்லாம் இல்லை போ! நான் என்ன, கழுத்திலே தொங்கத் தொங்கப் போட்டுக்கிட்டா இருக்கறேன், தங்கச் செயினு. உள்ளது, மூக்குத்தி—அதுவும் பாட்டி போட்டுக்கிட்டு இருந்தது—பழசு—முழுசா பத்து ரூபா கூடப் போவாது.

வேறே என்ன காரணம், தயக்கத்துக்கு...

அதென்னடி அப்படிக் கேட்டுவிட்டே...நான் என்ன ஒண்டிக்கட்டையா, நினைச்ச உடனே பொறப்பட. வீடுன்னு ஒண்ணு இல்லையா, அதிலே தட்டு முட்டுக் சாமானு ஏதோ கொஞ்சம் இல்லையா? கொழந்தை இருக்குது, தத்தித் தத்தி நடக்கற வயசு. அதை என்ன செய்யறது...

கொழந்தைக்கு என்ன...வீட்டிலே இருக்குது, வயத்துக்குப் போதுமானது போட்டுவிட்டா... பங்காளி வீட்டிலே, பார்த்துக்கொள்ள மாட்டாங்களா...

நல்லாச் சொன்னயே ஒரு பேச்சு; நண்டு சுட்டு நரியைக் காவல் வைக்கற மாதிரி, என் கொழந்தைக்குக் காவலு, என்னோட பங்காளிகளா? அதுபோதுமே தலைக்குத் தீம்பு.

உன்னோட கொழந்தையை, நீ, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்த் திரும்பற வரைக்கும், பார்த்துக் கொள்ளவா மாட்டாங்க உன்னோட பங்காளிங்க...

விவரம் தெரியாமப் பேசற. அந்தப் பங்காளிங்க—என் கொழந்தை பொறந்ததிலே இருந்து, சபிச்சுக் கொட்டிக்கிட்டு இருப்பவங்களாச்சே—உனக்குத் தெரியாதா? விளக்கேத்திக் கும்பிட்டாங்க, கொழந்தை மாந்தத்திலே போயிடாதா, மாரிக்குப் பலியாயிடாதான்னு எல்லாம்...

செச்சே! கொழந்தைன்னா கொடியவங்களெல்லாம் கூட கொண்டாடுவாங்கன்னு பெரியவங்க சொல்லுவாங்களே...

இது, எல்லாக் கொழந்தையும்போல இல்லா, அதைத் தெரிஞ்சுக்கோ முதலிலே. இது அரசாளப் பிறந்தது, ஆமாம். பூவாகி காயாகி கனியாக வேணும். அதைப் பாதுகாத்து, வளரச் செய்தா, நாங்க இழந்து விட்ட செல்வத்தை மீட்டுக் கொண்டு வந்து எங்களோட, குலம் விளங்க வழிசெய்து வைக்கும் அப்பேறபட்ட கொழந்தை இது.

இருக்கட்டும். அதனாலே என்ன? பங்காளிங்க என்ன அதைக் கடிச்சித் தின்னுப் போடுவாங்களா, கையைக் காலை ஒடிச்சிப் போடுவாங்களா...

கால் அரைக்கு வித்துப் போடுவாங்க, வெளியூரானுக்கு. காணாமப் போயிட்டுது, தேடாத இடமல்லே, சுத்தாத தெருவு இல்லே; கொழந்தையைக் காணோம்னு நீலிக் கண்ணீர் வடிச்சி, கதையை முடிச்சுடுவாங்க.

பைத்தியம் உனக்கு; கொழந்தையைக் கொடுமை செய்ய யாருக்கும் மனசு வராது...

அப்படியாச் சொல்றே......நெஜமா, நம்பிக்கையோடவா சொல்றே...

சத்யப் பிரமாணமாச் சொல்றேன், கொழந்தைக்கு ஒரு கெடுதியும் வராது. நான் பார்த்துக் கொள்றேன்; நீ பயமில்லாமல் போய் வா.

உன்னோட தைரியத்திலேதான், போக முடிவு செய்யறேன். கொழந்தைக்கு ஒரு கெடுதலும் வராதபடி பார்த்துக்கொள்ளு. தீ மிதிக்கிற திருவிழா முடிஞ்சி, நான் வீடு திரும்ப, விடிய மணி நாலு ஆகுதோ அஞ்சு ஆகுதோ, தெரியாது...

அப்ப, உன்னோட வீட்டுக்காரரும் அண்ணாவும் வந்ததும் கிளம்பப் போறயா...

ஆமாம்; அவரும் வருவாரேல்லோ...

ஆமாம், குடும்பத்தோடப் போனாத்தானே, பூஜை பலன் கொடுக்கும்...

நீ மட்டும் என்ன, நாங்களும்தான் வரப்

போறோம்னு அவங்களும் சொல்லிக்கிட்டுத்தான் இருக்கிறுங்க. நான் மட்டும் பொறப்பட்டா, போய்விட்டு வான்னு சொல்வாங்க—

எல்லோருந்தான் கிளம்புவாங்க......நான், நீ பொறப்படறப்போ, வந்து பார்க்கறேன்; வழி அனுப்பி வைக்கிறேன். உனக்குத்தான் தெரியுமே, நான், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போற பழக்கத்தை நிறுத்திப் போட்டது.

பவுன்னும்பாள் மெய்யம்மையுடன் பேசிவிட்டுச் சென்றுன பிறகு, மெய்யம்மையின் கணவன் கருத்தப்பன் வீடு வர, நடந்த உரையாடலை மனைவி கூறுகிறுள்.

கருத்தப்பன் எதனையும் ஆராய்ந்து பார்த்திடும் இயல்பினன்.

தீ மிதிக்கும் திருவிழாவுக்குப் போகவேண்டும் என்று ஏன் பவுன்னும்பாள் தூண்டிவிட முனைந்தாள் என்பது குறித்துச் சிந்திக்கலானுன். மெய்யம்மையுடன் அதுபற்றிப் பேசிடலானுன்.

பவுன்னும்பாளா சொன்னுங்கறே, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்வரச் சொல்லி......

ஆமா, அவதான் சொன்னு, தீ மிதிக்கிற திரு விழா வரட்டும், போகத்தான் போறேன், போகத் தான் போறேன்னு பேசிக்கிட்டே இருக்கறியே ஆட்சியூர் தடியெடுத்தான் கோயில் திருவிழாவுக்குப் போகல்லியான்னு......

அட, இது அதிசயமா இருக்குது, புள்ளே! பவுன்னும்பா வாயாலே. தீ மிதிக்கிற திருவிழா பத்திப் பெருமையாச் சொல்றது;...பவுன்னும்பாவும் வருதா உன் கூட......

இல்லே, இல்லே, அதெப்படி வருவா. அவதான், தீமிதிக்கிற வழக்கத்தை விட்டுவிட்டதாச் சொல்லி யாச்சே......

அதைத்தான் சொல்றேன்; தீமிதிக்கிறது பைத்தியக்காரத்தனம், அதாலே ஒரு பலனும் இல்லேன்னு ஊர் முச்சூடும் பேசிக்கிட்டு இருக்கிற பவுனும்பா, உன்னை ஏன் தூண்டவேணும், தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்லி......

அவபேர்லே குத்தம் கண்டு பிடிக்கறதா, நம்ம வேலே; நாம் சொல்லிக்கொண்டு இருந்தமேல்லோ, தீமிதிக்கிற திருவிழா வந்தா, போகப்போறேம்னு...

நாம் சொன்னது நெஜந்தான் மெய்யம்மே! அதை நான் மறுக்கல்லே. நம்மை, தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்றதிலே என்ன அக்கறை, ஏன் அந்த அக்கறை தீமிதிக்கிறதை வெறுக்கிற பவுனும்பாவுக்கு? அதுதானே புதிரா இருக்குது. நாம், வீட்டைவிட்டு, வெளியே போக ணும் என்கிறதிலே அல்லவா பவுனும்பாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்குதுன்னு தோணுது.

உங்களுக்குத் தோணும், எதற்கும் ஒன்பதனுயிரம் சந்தேகம்.

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய பவுனும்பாளை அவள் கணவன், வலைவிரிப்பான் கண்டு மகிழ்கிறுன்.

மெய்யம்மையிடம் பக்குவமாகப் பேசிக் காரியத்தைக் கச்சிதமாம முடிக்கிறுளோ இல்லையோ என்ற கவலையுடன் இருந்துவந்த வலைவிரிப்பான் பவுனும்பாள் வெற்றிக்களை முகத்தில் ஆட வந்தது கண்டு நடந்ததைக் கூறிடக்கேட்டு, பேசுகிறுன்.

சந்தேகப்படவே இல்லையா, மெய்யம்மா, உன் பேச்சைக்கேட்டு.

சந்தேகப்படுகிறதுபோலவா நான் பேசுவேன். எனக்கு என்ன, பக்குவம் தெரியாதா, பழக்கம் கிடையாதா.

பவுன்னும்பா! நீயோ இதுவரைக்கும், தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போறது தப்புன்னு பேசி வந்திருக்கே......

ஆமாம். இப்பக்கூடத்தான், என்னோட எண்ணம் அது. நான் போகப்போறது இல்லே, தீமிதிக்க...

தீமிதிக்கப் போகாதவ, எங்களை மட்டும் போகச் சொல்றயே, ஏன்னு மெய்யம்மை கேட்கலியா?

கேட்கவிடுவேனு? தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகப் பயமான்னு? கேட்டு ரோஷத்தை மூட்டிவிட்டேன். பாரேன், பிறகு மெய்யம்மை பட்ட பாட்டை! போகத்தான் போறேன், ஆனு கொழந்தை ஒண்ணு இருக்கேன்னு இழுத்தா...

மெய்யம்மைக்கு எப்பவும் அந்தக் கொழந்தை கவனம் இருக்குமே; தெரியுமே—

ரொம்பக் கவலைப்பட்டா கொழந்தைக்கு, பங்காளிங்களாலே, எதாச்சம் கெடுதல் வந்துவிட்டா என்ன செய்யறதுன்னு பொலம்பினு.

பொலம்பி? போகப் போறதில்லே தீமிதிக்கன்னு சொல்லிவிட்டாளா......

சொல்லவிடுவேனு? கொழந்தையைப்பத்திப் பயப்படவேணும்; பர்த்துக்கொள்ள நான் இல்லை யான்னு சொன்னேன் ஒப்புக் கொண்டா போக...

சாமர்த்தியக்காரி பவுனும்பா, நீ மெய்யம்மை குடும்பத்தோடத்தானே கிளம்புவா...

ஆமாம்; இவமட்டும் போனு, மத்ததுக சும்மா இருக்குமா...கொழந்தை மட்டும்தான் வீட்டிலே... கொண்டாட்டந்தான் உங்கபாடு...

நம்மபாடுன்னு சொல்லு—பிரித்து வைத்துப் பேசாதே...

எனக்கும் எதாச்சம் தரமலா போவிங்க கிடைக் கறதிலே...கொழந்தையோட பேச்சை எடுத்தா, எவ்வளவு உருகிப்போரு தெரியுமா மெய்யம்மெ! அடே அப்பா! அது அரசாளப் பிறந்ததாம்!!

அரசு ஆளும், ஆளும்டி பவுனுபா, ஆளும். இவகிளம்பட்டும் தீ மிதிக்க; அந்தக் கோட்டான் என்னகதி ஆகுதுபார்! அரசு ஆளப்போகுதாமா அவ கொழந்தை—கிடக்கட்டும். கைகொழந்தைக்கு யாருதான் காவலு?

கும்பத்தோடு கிளம்புரு மெய்யம்மெ. கொழந் தைக்கு காவல் இருக்க, பொது ஊரான்தான் கிடைப்பான்.

பொது ஊரானு? அவனுக்குத் தூபம் போட்டு விடலாமே, நாம ஒண்ணு சேர்ந்தா...

வழி இருக்குது அதுக்கு. நான் முன்னமேயே யோசனை செய்து வைத்திருக்கறேன்...

பலே பலே! என்ன யோசனை? சொல்லு, சொல்லு...

பச்சைக் கொழந்தை, பாவம்! அதைத் தனியா விட்டு விட்டு, இவங்களோட போக்கைப்பாரு, தீமிதிக்கக் கிளம்பிவிட்டாங்க, இது முறையா சொல்லு, இது நியாயமா சொல்லு! அப்படி இப்படின்னு பேசினுப் போதும் பொதுூரான் உருகிப் போய்விடுவான். தீமிதிக்கப் போனவங்களை வெறுத்துவிடுவான்...

கொழந்தைக்குக் காவல் இருக்கமாட்டானு—

நாம சொல்கிறபடி அவனைக் கேட்கச் செய்ய லாம் பாவம், கொழந்தையை உன்னுலே பாதுகாக்க முடியாது. கொடு இப்படி, நான் பார்த்துக் கொள்றேன்னு சொன்னு, கொழந்தையைக் கொடுத்துவிடுவான்......

கழுத்திலே இருக்கிறது எனக்கு, இப்பவே சொல்லிவிட்டேன்.

காலிலே உள்ளதும் கையிலே உள்ளதும் எனக்கு சரிதானே...

மெதுவாப் பேசு, யார் காதிலாவது விழுந்து விடப் போகுது. மெய்யம்மை குடும்பத்தோட கிளம்பற மட்டும் வெளியே மூச்சுவிடாதே, விவரத்தை; காரியம் கெட்டுவிடப்போகுது.

மெய்யம்மையிடம் பேசிவிட்டு, வெளியே வேறு வேலையாகச் சென்ற கருத்தப்பன் சாவடிப் பக்கத்திலே கோட்டையூரானும் கோலெடுத்தானும் பேசிக் கொண்டிருக்கக் காண்கின்றுன்.

ஒருபுறம் ஒதுங்கி நின்று அவர்கள் பேசு வதைக் கேட்கிறுன்.

தீமிதிக்கிறதுக்குத் துணிவு இல்லாத பயன்னு இனிப் பேச முடியாது அண்ணே! கருத்தப்பன் குடும்பத்தோட கிளம்பப்போறுன் தீ என்னுதான் செய்து விடும் பார்க்கலாம்னு கூறிக்கிட்டு......

பலே! பலே! அதைத்தானே நான் எதிர்பார்த்த படி இருந்தேன்! இந்தப்பய, தீமிதிக்க வேண்டியது தான், தீய்ந்துபோகும் இவனேட திட்டம்... தெரியுமா......

கோட்டையூர் அண்ணே! விவரமாச் சொல் லுங்க.

கோலெடுத்தான்! உனக்குத் தெரியுமேல்லோ, கருத்தப்பனேட திட்டம்......நம்ம கோட்டையூர்லே அவனுடைய கொழந்தை இருக்கே, உதயசூரியன், அதுக்கு இடம்பிடிக்கற எண்ணம்.

ஆமாம்! உதயசூரியனுக்குக் கோட்டையூரிலே இடம் கிடைக்குமுனுதான் சொல்றுன்......

சொல்றுனேல்லோ! இப்ப, இவன் தீமிதிக்கக் கிளம்பப்போறுனேல்லோ, அதோட தீர்ந்துபோய் விடும் கோட்டையூர்லே இடம் பிடிக்கற திட்டம்...

என்! தீ மிதிக்கறதிலே ஆசாமி தொலைஞ்சுப் போயிடுவான். அப்படி நினைக்கறியா?

அது அல்ல அப்பா! உனக்கு ஒரு இரகசியம் தெரியாது. நம்ம பெரியவரு இல்லே, தொலைதூரத் தான் அவருடைய பேச்சை மீறி கோட்டையூராகட் டும் வேட்டையூராகட்டும், நடக்க முடியுமா?

முடியாது! ராட்டையூர் ராஜா இல்லையா அவரு, அதனுலே.

அந்த தொலைதூரத்தான் என்ன உத்திரவு போட்டிருக்கிருரு தெரியுமா, தீ மிதித்தவன், கோட்டையூர் பாதையிலே நடக்கக்கூடாதுன்னு உத்திரவு.

தீ மிதிக்கப்போனு, கோட்டையூர் போகக் கூடாதா......

கோட்டையூர் பாதையிலேகூட நடக்கக்கூடாது. அதுதான் புது உத்திரவு.

அப்படியானு, தீமிதிச்சிவிட்டு, கருத்தப்பன் வீடு திரும்பியதும், கோட்டையூரை அடியோடு மறந்து விடணும்...

ஆமாம், ஆமாம்; உதயசூரியன் கோட்டையூர் போய் அரசாளப் போகிறுன்னு பேசிக்கொள்வா னேல்லோ கருத்தப்பன், அந்த எண்ணத்திலே மண் விழுந்தது...

ஊரார். பாவம், உதயசூரியனேட இவன் கோட்டையூர் போகப்போறுன்னு பேசிக்கொள் கிறுங்க......

ஆமாம்......தீமிதித்தா கோட்டையூர் பாதை யிலேயே நடக்கக்கூடாதே. புது உத்திரவு.

பாதையிலேயே நடக்கக்கூடாதுன்னு, கோட்டை யூர் போய் கொலுவிருக்கிறது எப்படி......

நடக்காதுங்கறேன். பவுனும்பாளும் அவளொட புருஷன் வலைவிரித்தானும் திட்டமிட்டு, மெய்யம் மையைத் தூண்டிவிட்டாச்சி.

தீமிதிக்கக் கிளம்பறதுக்கா! ஒத்துக்கிட்டாங் களா......

தாம்பூலத்திற்குச் சிறந்தது


ஒத்துக்கொள்ளாம இருப்பாங்களா! பம்ஞம்பா தான் பச்சை சிரிப்பிலே கெட்டிககாரியாச்சே! அடி ஆத்தே! நெருப்புன்னு பயமா எனக்கும் உங்க வீட்டுக்காரருக்கும்னு பேசி, மெய்யம்மைக்கு ரோஷ மூட்டி வீட்டிருக்கரு……

சரியான ஆசாமிதான்! ஏன் தூண்டுருன்னு யோசிக்க ரோஷம் இடம்கொடுக்காது……

ஆமாம்…பவுனும்பாளும் இருக்கிற எண்ணம். தீமிதிக்க மெய்யம்மையோட குடும்பம் போய் விட்டா. குழந்தை இருக்குமேல்லோ வீட்டிலே, அதோட கழுத்திலே கையிலே உள்ளதைப் பார்த்துக் கொள்ளலாம் என்பதுதான்.

அடடே! அவளோட திட்டம் அதுவா! ஆக, தீமிதிக்கப்போனு, குழந்தை கோட்டையூர் போக முடியாது……

ஆமாம்…ஆமாம்…எல்லாம் இவரோட ஏற் பாடு……தெரியுதா……என்னமோ பெரிய திட்டம் போட்டானே கருத்தப்பன், இப்ப பார்த்தாயா, அவனோட எண்ணத்திலே மண்விழுது……

தீ மிதிச்ச தீரன் கருத்தப்பன், அதனுலே அவ னோடமகன் உதயசூரியனுக்கு, கோட்டையூர்லே இடம் கொடுக்கணும், அதுதான் மரியாதை என்று நினைக்க மாட்டாங்களா…

அவனேகூட அப்படித்தான் நினைப்பான்; தீ மிதிச்சது பற்றிப் பேசினு, கேட்கிறவங்க மனசு பாகா உருகும்னு எண்ணிக்கிட்டுத்தான் இருப்பான். அவன் கண்டானு; தீயை மிதிச்சா, கோட்டையூர் பாதையிலே கூட அடி எடுத்து வைக்க முடியாது என்கிற விஷயத்தை…

எக்கச் சக்கமா மாட்டிக்கிட்டான் பய…

கிளம்பட்டும் தீ மிதிக்க…பிழைச்சி வந்தாக்கூட, பய இந்தப் பேச்சூரோடு இருந்துவிட வேண்டியது தான். ஒரு அடி கூட கோட்டையூர் பக்கம் போக முடியாது…பாரேன், திண்டாடப் போறதை…

தீ மிதிக்கும் திருவிழாவில் கலந்து கொள்ளும்படி, ஏன் தூண்டிவிடுகிருர்கள் என்பது கருத்தப்பனுக்குப் புரிந்துவிட்டது.

தீ மிதிப்பதோ, திட்டில் இருப்பதோ, எல்லாம், உதயசூரியன் கோட்டையூர் போய்ச் சேர உதவும் என்பதுதான் அவன் எண்ணம்.

கோட்டையூரில் உதயசூரியன் இடம் பெற்ருல்தான் பாலூர், தேனூர் போலாகும் என்று கூறி ஆட்சியைப் பிடித்துக்கொண்ட கோட்டையூரான், கோலெடுத்தானைத் துணைக்கு வைத்துக்கொண்டு மக்களைக் கொடு மைப்படுத்தும் அக்ரமத்தை ஒழிக்க முடியும்.

அதற்கு வாய்ப்புக் கிடைக்க விடாமல் தடுத்துவிட வேண்டும், கோட்டையூர் பாதை யிலேகூட நடந்திடக் கூடாது என்று உத்திரவு போடுவது, சூதான ஏற்பாடு.

இவ்விதமான சூது சூழ்ச்சிகளைக்கூட முறியடிக் கும் வல்லமை கோட்டையூர் போனுல்தான் முடியும்.

ஆகவே, கோட்டையூருக்கு உதயசூரியன் சென்று நாட்டை பெருவளநல்லூர் ஆக்கவேண்டு மானுல், தீ மிதிக்கச் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தான் கருத்தப்பன் சூழ்ச்சிக்காரரின் திட்டம் அறிந்ததால்.

வீடு சென்று பெய்யம்மையிடம், கூறிஞன், உதயசூரியனை கோட்டையூர் நுழையமுடியாமல் தடுத்திடத் தீட்டப்பட்டுள்ள சூழ்ச்சி பற்றி.

மெய்யம்மைக்கு அப்போதுதான் பவுனும்பாள் பசப்பிப் பேசியதன் காரணம் புரிந்தது.

தீ மிதிக்க முடியுமா என்று கேட்டு, ரோஷ மூட்டப் பார்ப்பது நம்மைக் கோட்டையூர் வர விடாது தடுப்பதற்காகத்தான் என்பது புரிந்ததும், மெய்யம்மை, தீ மிதிக்கச் செல்லத் தேவையில்லை என்று தீர்மானித்தாள்.

தீ மிதிக்கப் போவதில்லை, தங்கள் சூழ்ச்சி வெற்றிப் பெறப் போவதில்லை என்று தெரிந்ததும் பவுனும்பாளும் வலைவிரிப்பானும், கோட்டையூரா னும் கோலெடுத்தானும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டனர்.

மெய்யம்மை தன் குழந்தை உதயசூரியனை உச்சிமோந்து முத்தமிட்டு, அரசாளப் பிறந்தவனே! உன்னை அழிக்க அல்லவா அவர்கள் சூழ்ச்சி செய் தார்கள், எங்களைத் தீமிதிக்கச் சொல்லும்படி தூண்டிவிட்டு. உண்மை புரிந்தது. உன்னைக் காத்திட முடிந்தது. தீயோர் எண்ணத்தில் தீ விழட்டும் என்று கூறி மகிழ்ந்தாள்.

தீமிதிக்கமாட்டானும்…துணிவு இல்லை…என்று தூற்றிப் பார்த்தான் வலைவிரிப்பான்.

அவனோட துணிவுபற்றிப் பேசுவது இருக்கட்டும் நீ ஏன் உதயசூரியனைக் கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாது தீமிதிக்க அவர்கள் சென்ருல் என்று ஒரு புது உத்திரவு போட்டாய்? தைரியம் என்ரு அதற்குப் பெயர்! சூது! சூழ்ச்சி! அதை கருத்தப்பன் புரிந்துகொண்டதால்தான், நீங்கள் மூட்டிய தீயிலே விழ மறுத்துவிட்டார்கள்! இது புரியவில்லையா எங்களுக்கு என்று நாட்டாண்மைக்காரர் **தெளிவப்பன்** கூறினுர்.

நல்ல காரியம் செய்தாயப்பா! பயந்துகொண்டி ருந்தோம், அரசாளப் பிறந்தவனை விட்டுவிட்டு நீங்கள் எங்கே தீ மிதிக்கப் போய்விடுவீர்களோ என்று. நல்லவேளை, உங்களுக்கு அவர்கள் சூழ்ச்சி புரிந்துவிட்டது—என்று வாக்களிப்பர் பாராட்டினுர்.

தீயிலேதள்ளி, என்னென்றும் உதயசூரியன் கோட்டையூர் நுழையாதபடி செய்துவிடலாமென்று சூழ்ச்சி செய்தோம், முடியவில்லை; இனி, கோட்டை யூர் பாதையிலே காவலிருக்கவேண்டும், உதயசூரி யனை அழைத்துக்கொண்டு, கருத்தப்பனும் மெய்யம் மையும் வராதபடி தடுத்திடவேண்டும் என்று கோட்டையூரானும் கோலெடுத்தானும் முனைந் தனர்.

அவர்களுக்குத் துணையாக **நோட்டூரோன், இருட் டூரோன்,** போன்ருர் நின்றனர்.

பயப்படாதே தம்பி! நாங்கள் துணை இருக்

கிறோம் என்று கூறி வாக்களிப்பாரும். தெளிவப்ப னும், முன்வந்தனர். உதயசூரியன் புன்னகை புரிந்தான்.

அன்பானந்தரே! புதுமையாக இருக்கிறதே உமது கதை; எதற்காக இப்படி ஒரு கதையைக் கூறினீர்கள் என்று கேட்டேன்; அவர் சிரித்துக் கொண்டே "ஏனப்பா! கதையைக் கேட்டதும் உனக்கு கருத்து புரியவில்லையா?" என்று கேட்டு விட்டு, "இப்போது நீயும் உன்னுடைய உடன் பிறப்புகளும் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? எந்த முயற்சியிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறீர் கள்? தேர்தல் வேலையிலேதானே" என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

"ஆமாம்! தேர்தல் வேலையிலேதான்! அது என்ன பாதகச் செயலா? கேவலமானதா!! என்று நான் கேட்டேன்.

"ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுவிட்டு, தேர்தல் காரியத்தைக் கேவலமானது என்று கூற முடியுமா. திருமணம் செய்துகொண்டு, குடும்பத்தை நடத்திச் செல்வது கேவலம் என்று சொல்வார் உண்டா? தேர்தல் என்பது ஜனநாயகத்தில் ஏற்பட்டு விடும் மிக முக்கியமான கடமை. நான் அதைக் குறைகூறவில்லை. இந்தத் தேர்தலில் ஈடுபட்டு படிப்படியாக நீங்கள் முன்னேறி வருகிறீர்கள், இல்லையா?" என்றார்.

"ஆமாம்! பொதுமக்களுடைய நல்லாதரவு காரணமாக......" என்று நான் விளக்கம் தந்தேன்.

"உங்களைப் பொதுமக்கள் துளியும் ஆதரிக்க வில்லை என்று கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சிக்கு, இதனால் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட் டுத்தானே இருக்கும்?"

"ஆமாம்! கொஞ்சநஞ்சமான எரிச்சல் அல்ல" என்று நான் கூறினேன்.

"அந்த எரிச்சல் காரணமாகத்தான், காங்கிரஸ் கட்சி உங்களைத் தூற்றுகிறது? இல்லையா?" என்று கேட்டார்.

"சாதாரணமான தூற்றலா! பண்புள்ள யாரும் பேசக் கூசிடும் பேச்செல்லாம் பேசுகிறார்கள்; பெரிய இடத்தில் அமர்ந்திருப்பவர்கள்கூட!" என்று நான் கூறினேன்.

"வருத்தப்படுகிறாயா! பைத்தியமே! பைத்தி யமே! அவர்கள் தூற்றத் தூற்றத்தான், அதனை நீங்கள் தாங்கிக்கொள்ள தாங்கிக்கொள்ளத்தான், பொதுமக்களுக்கு உங்களிடம் ஒரு பரிவு, பற்று ஏற்பட்டிருக்கிறது. அதனையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆகவேதான் உங்களை எப்படியாவது தேர்தலிலே நிற்க ஒட்டாதபடி தடுத்துவிட முயற்சித்தனர். சாதாரண முறைகள் போதவில்லை. ஜனநாயகத்தை நடத்துவதாக உலகத்துக்குச் சொல்லிவிட்டு, ஒரு கட்சியைத் தேர்தலுக்கு நிற்க விடாதபடி, தடை உத்திரவு போடமுடியவில்லை. ஆகவே நேர்வழி கூடாது என்று குறுக்குவழி சென்று ஒரு சட்டம் உண்டாக்கிக் கொண்டனர். பிரிவினை கேட்பவர்கள் தேர்தலிலே ஈடுபடக்கூடாது என்ற சட்டம். ஆஹா! சட்டம் போட்டா எங்களை மட்டந்தட்டப் பார்க்கிறீர்கள் என்று நீங்கள் கூவிக் கொந்தளித்து. சட்டத்தை மீறுவீர்கள். உடனே தேர்தலில் நிற்கும் உரிமையை அழித்துவிடலாம், போட்டி இருக்காது, போகபோக்கியம் தரும் பதவி என்னென்றும் இருக்கும் என்ற சூழ்ச்சி. அதை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள், அதனால் ஜனநாய கம் பிழைத்தது. அதைத்தான் நான் கதையாகக் கூறினேன்! தீமிதிக்கிற திருவிழாவுக்கு, பவுனம்மா ளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மெய்யம்மை போயிருந்தால், அவள் குழந்தைக்கு என்ன கதி நேரிட்டிருக்கும்!!" என்று விளக்கினார்.

"பெரியவரே! உம்மைப்போன்றவர்கள் உண் மையை உணர்ந்து ஊராருக்கு உரைப்பீர்கள் என்பதிலே எங்களுக்கு உள்ள நம்பிக்கைக் காரண மாகவே, நாங்கள், காங்கிரஸ் அரசு தீட்டிய சூழ்ச் சிக்குப் பலியாகக் கூடாது என்று முடிவெடுத்தோம்" என்றேன் நான்.

"நல்ல முடிவு! உதயசூரியன் நாடாளும் வாய்ப் புப் பெற வழி கிடைத்திருக்கிறது." என்றார் அறிவானந்தர்.

"உங்கள் பேராதரவும் நல்வாழ்த்துக்களும் வேண்டும் ஐயா!" என்றேன்.

"தாராளமாக! ஏராளமாக!" என்று அறிவானந் தர் கூறினார் மலந்த முகத்துடன்.

யார் அந்த அறிவானந்தர்! ஆறேழு ஆண்டுகள் அரித்துவாரத்தில் ஆசிரமம் நடத்திய மகானா? அல்லது கேட்டதும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக அள்ளிக் கொடுத்திடும் சீமானா? என்று கேட்கிறாயா, தம்பி!

அறிவானந்தர், உழைத்து உருக்குலைந்த நிலையில் உள்ள ஒரு எளியவர்! கவலைக்கோடுகள். படிந்துள்ள முகம்! கள்ளங் கபடமற்ற மனம்!! தான் படுகிற அல்லலையும் தொல்லையையும், தன் பிள்ளைகளாவது படாமல், நிம்மதியான வாழ்வு பெறவேண்டுமே என்ற ஏக்கம். தன்னைப் போன்றவர்கள் கொண் டுள்ள ஏக்கத்தைப் போக்கிடத்தக்க ஒரு நல்லாட்சி அமையவேண்டுமே என்ற எண்ணம் கொண்டவர். அமையும் என்ற நம்பிக்கை கொண்டவர்!

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

**தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.**

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


மிட்டா மிராசு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அலையும் திருக்கூட்டத்தினர் அல்ல! உழைப்பின் பலனைப் பெறவேண்டும் என்று எண்ணிடும் தூயவர்.

அவர் பர்மிட்டும் லைசென்சும் கேட்கவில்லை; பாலும் தேனும் ஓடிடவேண்டும், அள்ளி அள்ளிப் பருகிடவேண்டும் என்ற பேராசை கொண்டவர் அல்ல!

செய்திட ஒரு வேலை! அதிலே ஒரு நீதி, ஒரு நிம்மதி! குடியிருக்க ஒரு இடம்! வயிறாரச் சோறு! மானங்காத்திட ஆடை! நோயற்ற வாழ்வு! ஓய்வு நேரம், உள்ளத்துக்குக் குளிர்ச்சி தர!—இவைகளைத் தான் எதிர்பார்க்கிறார்.

எங்கே இருக்கிறார் அந்த அறிவானந்தர்? என்றா தம்பி! கேட்கிறாய்? எங்கும் இருக்கிறார்! இந்நாட்டு உழைப்பாளியைத்தான் சொல்கிறேன்.

அவரிடம் பேசிப்பாரேன்! ஆதரவும் புரியும்! நல்வாழ்த்தும் கிடைத்திடும்.

அதனைப் பெற்றிடுவதிலே மட்டும், தம்பி! நீ வெற்றி பெற்று விட்டால், பிறகு, உன் ஆட்சி அமைவதைத் தடுத்திடும் வல்லமை எவருக்கும் இருக்கப் போவதில்லை.

அவர், ஏழை; உழைப்பாளி; கவலை நிரம்பியவர், ஆனால் தம்பி! மறந்துவிடாதே! அவர் இந்நாட்டு மன்னர்!

அவா 'கோலம்' பளபளப்பு அற்றது! குரல் வலி வற்றது! ஆனால், அரசுகளை ஆக்கவும் அழிக்கவும் தேவைப்படும் ஆயுதம் அவரிடம் இருக்கிறது! ஓட்டுச்சீட்டு!!

அண்ணன்,

அண்ணாதுரை

18-9-66

# மலர்க்கொடியே! என் மகளே!

கு. சந்தானம்

'பண்ணையாரின் மீசைத் துடிப்பிற்கும் இந்த காளை மாடுகளுக்கும் எவ்வளவு துடிப்புபார்!' என்று எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்த வண்டிக் காளைகள் பறந்து கொண்டு இருந்தன. வேலன் தனக்கே உரிய ஒரு கம்பிரமான குரலில் காளைகளை அதட்டிக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான். ஏறக்குறைய அந்த ஊரில் இருந்து இரயில் நிலையம் வரை வழிமுழுவதும் பண்ணையாரின் நிலம்தான் இருக்கும். பண்ணையாருக்கு ஒரே ஒரு குலக் கொழுந்துதான் ராஜா. சிறு குழந்தையாக இருக்கும் பொழுது தன் உயிருக்கு உயிராக இருந்த தன் தங்கையை பறிகொடுத்தவன்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென கூறிவிட்டு, தம்பி! இதை தாங்க இதயம் இருக்கின்றதா பார்? என்று கேட்பதைப் போல நம்மை எல்லாம் விட்டுப் பிரிந்துவிட்ட அண்ணாவைப் போல்,

"அண்ணா நான் எப்பொழுதும் உன்னுடனே இருப்பேன் என்று கூறி, அவள் வாழ்ந்த அந்த குறைந்த நாட்களில் என் அன்பை எல்லாம் பறித்துக் கொண்டு இதுவே போதும் என்று பிரிந்து விட்டாளோ! அல்லது அன்பை எல்லாம்தான் பிடுங்கிக் கொண்டோமே இனி என்ன இருக்கப் போகின்றது அண்ணனிடம் என்று எண்ணித்தான் மறைந்து விட்டாளோ அந்தப் பொற்சிமிழ்! என்று ராஜாவின் எண்ணங்கள் ஏங்கிக் கொண்டு இருந்தன.

அதிலிருந்து அவன் நினைவுகள் வெடித்த பலூனைப்போல சிதரிப் பிரிந்தன. அவன் ஒரு நடமாடும் உருவமாகத்தான் உலவிவந்தான்.

தன் ஒரே மகன் நன்றாக படித்து சிறந்த பட்டம் பெறவேண்டுமென பண்ணையார் கனவெல்லாம் நினைவாக்கத்தான் தன் மகனை தன் ஊரிலிருந்து சில மைல் தூரத்தில் உள்ள கல்லூரிக்கு அனுப்பி வந்தார். ரயில் நிலையம்வரை தன் வண்டியிலேயே செல்வான் ராஜா. வழிமுழுவதும் வரவேற்பு அமோகமாக இருக்கும். வயலில் வேலை செய்பவர்கள் இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு கும்பிடு போடுவர்.

இதை எல்லாம் காணும்போது வருத்தமாகத்தான் இருக்கும். இருந்தும் என்ன செய்வது? இவர்களை திருத்த முடியுமா? வாழ்க்கையின் நிழலையே காணாத அவர்கள் வாடி வதங்குவதைக் காணும் போது ராஜாவின் உள்ளத்தில் எத்தனையோ கேள்விகள் மிதக்கும் ஆனால் அதற்கு வழி காணத் தெரியாமல் துடித்துக் கொண்டு இருந்தான். அன்று கல்லூரிக்கு சென்றுவிட்டு வழக்கம்போல் தன் வீட்டிற்கு திரும்பினான் ராஜா. அவன் வந்ததும் அவனுக்கு, வேலைக்காரி அம்புஜம்தான் காப்பி கொண்டு வந்து கொடுப்பாள். ஆனால் அன்று மட்டும் அவள் ஏன் கொண்டு வரவில்லை. ஏதாவது வேலையாக இருக்கும் போலிருக்கின்றது. சரி நாமே சென்று காப்பி குடித்துவிட்டு வரலாம் என்று சமையல் அறையினுள் நுழைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சியதைப் போலிருந்தது. அரை வாழ்க்கையை கடந்து விட்ட அம்புஜம் தள்ளாடிக் கொண்டு எல்லாப் பாத்திரங்களையும் தேய்த்துக் கொண்டு, தானும் தேய்ந்து கொண்டு இருந்தாள். இதைப் பார்க்கும் பொழுது ராஜாவின் கண்களில் இரத்தம் தான் வடிந்தது.

ஆம் சிறு வயதிலேயே தன் தாயை இழந்த ராஜா தன் உயிருக்கு உயிராக இருந்த தன் தங்கையின் மீது அன்பை எல்லாம் கொட்டி மகிழ்ந்து வந்தான்.

தங்கையின் பிரிவால் அவன் தினமும் வாடியதால் கண்களில் நீர்வற்றிவிட்டது போலும்! அதனால்தான் அம்புஜத்தைப் பார்த்ததும் சோகத்தால் அவன் கண்களில் ரத்தம் சொரிந்து கொண்டு இருந்தது. நினைவெல்லாம் தாயும் தங்கையும் பரித்துக் கொண்டதால் அவன் யாரிடமும் அதிகமாக பழகுவதும் பேசுவதும் இல்லை.

அதனால்தான் அன்று அம்புஜம் தள்ளாடித் தள்ளாடி வேலை செய்து கொண்டு இருந்ததைப் பார்த்ததும் அவளிடம் பேச முடியாமல் எண்ணத்தில் மிதந்து கொண்டு இருந்தான்.

தன்பின்னால் கர்ஜித்த குரலைக் கேட்டு திரும்பிப் பார்த்தான்.

"என்னடி கழுதை! அங்கு என்ன கிழித்துக் கொண்டு இருக்கிறே! குழந்தை வந்து எவ்வளவு நேரம் ஆகுது இன்னும் காப்பி கொடுக்காமல் இருக்கிறியே" என்று பண்ணையார்தான் பொறிந்து கொண்டு வந்தார்.

தந்தையின் அதிகாரக் குரலுக்கு வருந்துவதா அல்லது அந்த ஏழையின் வாழ்வை எண்ணி ஏங்குவதா என்று புரியாமல் தவித்தான் ராஜா.

"நான் காப்பி சாப்பிட்டு விட்டேம்பா", என்று தன் தந்தைக்கு ஆறுதல் கூறிவிட்டு தன் அறைக்கு சென்றுவிட்டான். இரவு முழுவதும் சிந்தனைதான். உழைக்கும் உருவங்கள் தேய்கின்றன! அதை உண்டு களிக்கும் உள்ளங்கள் மகிழ்கின்றன. கடவுளே என்ன உலகம் இது? சமுதாயத்தில் சூழ்ந்து கிடக்கும் இந்த இருண்ட வாழ்க்கையை நினைக்கும்போது அவன் இதயத்தில் ஆயிரம் ஊசிகள் ஒரே நேரத்தில் பாய்வதைப் போல் இருக்கும். இதயத்தை அழுத்திப் பிடித்துக் கொள்வான். வேறு என்ன செய்யமுடியும். இறைவன்தான் அதை பாதுகாப்பான இடத்தில் வைத்து விட்டானே!

காதலிக்கும் ஒரே இடம்!
அவள் பிரிவிற்கும் அதே இடம்!
இன்பத்திற்கும் ஒரே இடம்!
அடுத்து துன்பத்திற்கும் அதே இடம்!

இதை எல்லாம் தாங்கும் கருவி தானே இதயம்! அதனால்தான் இதை எல்லாம் தாங்க இரண்டு மனம் வேண்டும் என்று இறைவனிடம் கேட்டாரோ கவிஞர்!

இரவெல்லாம் உறக்கமில்லை. சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான்.

அன்று மறுநாள் ராஜா, ரயில் நிலையத்திற்கு தன் மாட்டு வண்டியில் சென்று கொண்டு இருந்தான்.

தினமும் அவன் போகும்போது வழியில் தன் வேலைக்காரியின் மகள் மலர்க்கொடி பள்ளிக்கு செல்வதைப் பார்த்துக் கொண்டு தான் செல்வான்.

ஏழைக்குத்தான் எவ்வளவு அழகான பெயர். அது எவ்வளவு பொருத்தம். மலர்க்கொடி என்ற அந்த ஒரே பெயரிலேயே அடங்கி விட்டது அவள் அழகு, நடை, உடை எல்லாம்.

ஆம்! உடை எல்லாம் கொடியில் இருக்கும் பட்டுவிட்ட இலைகளைப் போலத்தான் கிழிச்சலும், நாரும்போல் இருந்தது. இயற்கை

இந்த விதத்தில் மட்டும் அவளுக்கு சமம் செய்து இருந்தது. பணத்தைத்தான் கொடுக்கவில்லை என்றாலும் அழகை மட்டும் அவள் உடலில் வாரி கொட்டி இருந்தது. அழகுமட்டும் இருந்து என்ன பயன். பணமும் வேண்டுமே! பணம் இல்லாமல் இன்று எதை செய்ய முடிகின்றது? எப்படியோ தான் சம்பாதிக்கும் குறைந்த பணத்திலே குடும்பத்தை நடத்தியும், மகளையும் படிக்க வைத்துக் கொண்டு வந்து விட்டாள் அம்புஜம். மலர்க்கொடியும் நன்றாக படித்துக் கொண்டு வந்து பள்ளி இறுதி ஆண்டை பிடித்து விட்டாள். இதுவரை எப்படியோ ஒன்று அல்லது இரண்டு புத்தகங்களை வைத்துக் கொண்டு படித்து விட்டாள். ஆனால் இந்த ஆண்டு நிறைய புத்தகமும் நோட்டுகளும் வாங்கவேண்டும். அதனால் அன்று தாயிடம் பணம் கேட்டாள் மலர்க்கொடி. என்ன செய்வாள் தாய்? பணம் என்ன அவள் வீட்டு இரும்பும் பெட்டியிலா உறங்குகின்றது. மகள் கேட்டதும் அலட்சியமாக எடுத்துக் கொடுக்க! அன்பைத் தவிர வேறு என்ன இருக்கின்றது அவளிடம் உடனே எடுத்துக் கொடுக்க. மகளை ஒரு வழியாக சமாதானம் செய்து அனுப்பி விட்டாள். ஏழ்மையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் தன் வாழ்க்கையை எண்ணியபடி கலங்கிக் கொண்டே சென்றாள் மலர்க்கொடி பள்ளிக்கு.

மலர்க்கொடியை பார்க்கும் பொழுது ராஜாவின் நினைவுகளெல்லாம் அவன் தங்கையின் மீது தாவும். ஏறயகுறைய இவளைப் போலவேதான் இருப்பாள் அவன் தங்கையும்.

அன்று மலர்க்கொடி கலங்கிக் கொண்டு செல்வதைக் காணும் போது ராஜா தன் தங்கையே தன் முன் அழுது கொண்டு செல்வதைப்போல் உணர்ச்சி வசப்பட்டான். வேலனிடம் வண்டியை நிறுத்தச் சொல்லி, மலர்க்கொடியை அழைத்து விசாரித்தான்.

பண்ணையாரின் மகன் என்பதனால், பயத்தினால் அவள் எதுவும் பேசாமல் தலைகுனிந்து நின்றாள். பெண்மையாயிற்றே இருக்காதா?

முடிவில் சொற்களை கூட்டி விழுங்கி ஒருவழியாக பதில் கூறினாள்.

ஏழைக்கு உதவுவது என்றால் அவனுக்கு மிகவும் விருப்மம். இதில் மட்டும் தந்தைக்கு எதிர் மாறாக இருந்தான். தன் வீட்டில் தினமும் ஓடாகத் தேய்ந்து கொண்டு இருக்கும் வேலைக்காரியின் மகளுக்கு உதவி செய்வது என்றால் அதில் மிகவும் மகிழ்ச்சி அவனுக்கு. உடனே தன் பாக்கட்டில் இருந்த இருபது ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவளிடம் கொடுத்து புத்தகங்களை வாங்கிக் கொள்ளும்படி கூறிவிட்டு சென்று விட்டான்.

"பண்ணையாரின் மகன். அவரிடம் எப்படி வதாடி வேண்டாம் என்று திருப்பிக் கொடுப்பது அதுவும் நடுரோட்டில் யாராவது பார்த்தால் என்ன கதை கட்டுவார்கள். சரி இருக்கட்டும். மாலை பள்ளி விட்டுவரும்போது அம்மாவிடம் கொடுத்து அவரிடம் கொடுக்கச் சொல்லி விடலாம்" என்று எண்ணிக்கொண்டு பள்ளி சென்று விட்டாள்.

ராஜாவை இரயிலில் அனுப்பி விட்டு திரும்பிய வேலனுக்கு 'வெறும் வாயிற்கு அவல் கிடைத்ததைப்போல் ஆகிவிட்டது! இதை வைத்துக் கொண்டு மலர்க்கொடியைப்பற்றி கயிறுதிறித்து விட்டான்.

"அதுதானா அந்த அலுக்கு மேனி தலுக்கு நடைபோட்டு அந்த மாப்பிள்ளை வரும் நேரம் பார்த்து பள்ளிக்கூடம் போறாளா"

என்று அம்புஜத்திற்கு கேட்கும்படி ஜாடையாக பேசிக்கொண்டு சென்றனர் பண்ணையாரின் வேலையாட்கள். இதைகேட்டதும் அம்புஜத்திற்கு கண்களில் முள் குத்தியதைப்போல் இருந்தது. எதற்கும் மகள் வரட்டும் விசாரித்து உண்மை அறிந்து கொள்ளலாம் என்று காத்திருந்தாள்.

பள்ளியில் இருந்து திரும்பிய மலர்க்கொடியைப் பார்த்து அவள் கேட்ட முதல் வார்த்தை.

"பண்ணையார் மகனிடம் பணம் வாங்கினாயா?" என்ற கேள்விதான்.

ஆனால் தாய் என்ன பொருள் வைத்துக் கொண்டு கேட்கிறாள் என்று உடனே புரிந்து கொள்ளாத மலர்க்கொடி, "ஆமாம்மா நான் எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. இந்தாம்மா இதை நீயே அவரிடம் திருப்பி கொடுத்துவிடு" என்று கூறி பணத்தை தாயிடம் திருப்பிக் கொடுத்தாள்.

"செய்வதையும் செய்துவிட்டு தப்பிக்க பார்க்கின்றாயா? அடிப் பாவி! ஏழை என்றாலும் நாம் மானத்தோடு வாழ்கின்றவர்கள். ஓடு, இதை எடுத்துக் கொண்டு சென்று அவன் முகத்தில் வீசி எறிந்துவிட்டு வா!" என்று தாய் துடித்தாள்.

கடவுளே! இது என்ன சோதனை! அந்த உயர்ந்த உள்ளத்திற்கு கிடைக்கும் பரிசா இது?

என்று கலங்கிக் கொண்டே பண்ணையார் வீட்டிற்கு சென்றாள். ஆனால் வீட்டில் பண்ணையார் இருந்தார். எனவே ஒரு காகிதத்தில் "இந்த பணத்தை திருப்பி எடுத்துக் கொள்ளுங்கள் என்று எழுதி பணத்துடன் வைத்து வேலனிடம் கொடுத்து ராஜாவிடம் கொடுத்து விடும்படி கூறிவிட்டு திரும்பிவிட்டாள். அவள் செயல் மேலும் ஊராருக்கு சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது. "ஓஹோ அப்படியா செய்தி! அந்த கழுதைக்கு இருபது ரூபாய் போதாதாமா? பண்ணையார் மகனாயிற்றே கனமாக எதிர்பார்க்கின்றாள் போலிருக்கின்றது! மானங்கெட்டவள்"

என்று தூற்றல்கள் மிகுந்தன மலர்க்கொடியைப் பற்றி. அம்புஜம் இதைக் கேட்டு உண்மையை உரைக்கத் துடித்தாள். அது ஏழையால் எப்படி முடியும். பணமா இருக்கின்றது கொட்டி மறைத்து விட, நெருப்பில் விழுந்த எறும்பைப் போல் அவள் துடித்தாள். என்னபயன். முடிவு மகளை அனாதையாக்கி விட்டு பிரிந்து விட்டாள்.

தாயைப்பிரிந்த மலர்க்கொடி கதறி புரண்டாள். என்ன செய்து என்ன பயன். மாண்டவள் மீள்வாளா!

தன்னால்தானே மலர்க்கொடிக்கு இந்த நிலை என்று ராஜா மனம் குமுறினான்.

நாட்கள் உருண்டோடின. ஒரு நாள் ஒரே பரபரப்பு! மலர்க்கொடியைக் காணவில்லை.

ஓடுகாளி!

சண்டாளி!

மானங்கெட்டவள்!

ஊரே வசைமாறி பொழிந்தன மலர்க்கொடியைப் பற்றி.

ராஜாவும் மனம் திருந்தியவனைப் போல எல்லோரிடமும் நன்றாக பேசி பழகி வந்தான். நம் பிள்ளையை பிடித்திருந்தபேய் ஒழிந்தது என்று பண்ணையார் மகிழ்ந்தார். வாரி கொடுத்தார் பணத்தை அவன் விருப்பப்படி செலவு செய்ய!

(15-ஆம் பக்கம் பார்க்க)

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

ஒருவழியாகத் தொடர்பு கிடைத்தது.

"யார் பேசுபவர்?"

"புகழேந்திதானே?"

"ஆமாம். அத்தானா? நீங்கள் திண்டிவனத்திற்கு எப்போது வந்தீர்கள்?"

"நானேதான். புகழேந்தி, இரண்டு நாளைக்கு முன் அப்பா பட்டிணத்திலிருந்து வந்ததும் காய்ச்சல் வந்தது. திடுமென ஒரே நாளில் மிக அஞ்சத்தக்க நிலைக்கு நிலைமை கெட்டுவிட்டது. அவரால் பேச முடியவில்லை. வாய் குழறுகிறது. இன்று காலை எங்களுக்கு ஆள் வரவே நானும், உன் தமக்கை அறப்பாவையும் இங்கு வந்திருக்கிறோம். மருத்துவர் நம்பிக்கையிழந்து விட்டார். அப்பா உன் பெயரைக் கூறுகிறார். அஞ்சவேண்டாம். என்னால் ஆனவரை கவனிக்கிறேன். நீ உடனே புறப்பட்டுவா."

"அப்பா, பேசவே இல்லையா?"—புகழேந்தி அழுது விட்டான்.

"இல்லை புகழேந்தி. கவலைப்படாதே. நாம் என்ன செய்ய முடியும்?"

பேச இயலாமல் தொலைபேசியை அதியமானிடம் கொடுத்துவிட்டுப் புகழேந்தி துன்பந்தாளாமல் குமுறி அழுதவாறு இருக்கையில் அமர்ந்து விட்டான். அவன் தோளை ஆறுதலாகப் பற்றிக் கொண்ட அதியமான் பேசலானார்.

"மருத்துவர் என்ன சொல்கிறார்?"

"மூன்று ஊசி குத்தினார். நம்பிக்கை குறைவாக இருக்கிறது என்று கூறிவிட்டார். ஓ! நீங்கள் அதியமானா?"

"ஆம். நல்லது. விரைவில் நாங்கள் வந்து விடுகிறோம். கவனித்துக் கொள்ளுங்கள்."

பேச்சு முடிந்தது.

புகழேந்தி எழுந்திருக்க இயலாமல் வருந்திக் கொண்டிருந்தான். ஒருவாறு ஆறுதல் கூறி வீட்டிற்கு அழைத்து வந்தார் அதியமான்.

புகழேந்தியே உயிரிழந்தாற்போல வருந்தினான். அவனுணர்ச்சிகள் புதைத்து விட்டன. அவன் முகம் ஒருநொடியில் அச்சக்களஞ்சியமாயிற்று. உடல் பதறியது.

"புகழேந்தி, சோர்ந்து போய் விட்டாயே. அப்பாவுக்கு உடல், நலமடையும் என நாம் நம்ப வேண்டும். கவலைப்படுவதால் ஆவதொன்றில்லை. பொற்றொடியாரும் செல்வியும் துடித்துப் போய் விட்டனர் செய்தியறிந்து.

"அம்மா, குடிக்கத் தண்ணீர் கொண்டுவா அம்மா என்றார் பொற்றொடியார்.

செல்வி உள்ளே சென்று குண்குசெம்பு நிறைய நீரும் குவளைகளும் கொண்டுவந்து, குவளைகளில் நீரூற்றி இருவருக்கும் அளித்தாள்.

"பொற்றொடி, புகழேந்தியின் தமக்கையார் அறப்பாவையின் கணவர் சுடர்க்கொழுந்து பேசினார். உடனே நாங்கள் புறப்படவேண்டும். விரைவுப் பேருந்து வாயிலாகச் செல்லமுடியும் எனக் கருதுகிறேன். உம்...மக்களுடைய நிலையாமையை நினைத்தால்...உம்..." எனக் கூறி அமைதியானார்.

தண்ணீரைக் குடிக்காமலே கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த புகழேந்தியின் தந்தையன்பை எண்ணிச் செல்வியும் பொற்றொடியாரும் கண்ணீர் பொழிந்தனர்.

உருக்கமான அந்தச் சூழ்நிலையில் அமைதியே நோயும் மருந்துமாக அமைந்திருந்தது.

"கலங்காதே புகழேந்தி. நீ ஆண்மகன். நீயே இவ்வாறு வருந்தலாமா? இப்போது என்ன நடந்து விட்டது? அமைதியாக இரு அப்பா." எனத் துணிவுரை கூறினார்.

ஆறுதல் மொழிகளே அவலத்தை மிகுவிக்கும் தூண்டுகோல்களாயின.

உதட்டைக் கடித்துக் கொண்டுதலை கவிழ்ந்தான்.

தன்னறைக்குள் சென்ற புகழேந்தி படுக்கைமீது விழுந்து 'அப்பா' என வாய் விட்டலறி அழுது விட்டான்.

உடம்பெல்லாம் வாயாக அழுது தீர்க்க அவனுள்ளம் துடிதுடித்தது!

ஒரே மகனானதால் ஒப்பிலழகர் புகழேந்தியைப் பிரியாமலேயே தன்னோடே வளர்த்து வந்தார். இடையறு அன்புச் பிணைப்பைப் பதவி உயர்வு தகைந்தது. இன்று...

இருக்கவும் இயலாமல் நிற்கவும் ஒவ்வாமல் நிலை கொள்ளாமல் புகழேந்தி தத்தளித்தான்.

"புகழேந்தி, துணிமணிகளை எடுத்துக் கைப் பையில் வைத்துக் கொள்ளலாமே?' என அதியமான் கூறியபின், சில துணிகளை எடுத்து வைத்தான். அதியமானும் தன்கைப் பையில் துணிகளை வைத்துக் கொண்டு புறப்பட்டார்.

இருவரையும் சுமந்து கொண்டு விரைவுப் பேருந்து சென்னையினின்றும் புறப்பட்டது.

## 40

நாற்காலியில் அமர்ந்து, ஆழ்ந்த கருத்துடன் பெருஞ்சித்திரனாரின் 'ஐயை' இலக்கியத்தை படித்துக்கொண்டிருந்தாள் செல்வி.

விரைந்து உள்ளே வந்த முகிலன் செல்வியை நேரில் அணுக்கமாகக் கண்டதும் திகைத்து வியந்தான்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத செல்வியின் பேரெழில் முகிலனின் கண்களைக் கூசச் செய்தது; கருத்தை அசைத்தது.

ஆன்றவிந்து அடங்கிய கொள்கையாளான பண்புத் திருமகளின் முகமலரில் ஒளிர்ந்த ஒழுக்க ஒளி முகிலன் கனவு காணாத ஒரு பேரினிமைச் சுவையை ஊட்டியது. நிலைமறக்கச் செய்யும் செல்வி யின் வாழ்த்தும் வனப்பை நிலையிழக்கச் செய்யாத செல்வியின் பெண்மைப் பண்புகள் காத்து விளங்கும் எழிற்கோல நிலையை முகிலன் உணரலானான்.

“புகழேந்தி!” என அழைத்தான்.

நிமிர்ந்த செல்வி விரைந்து எழுந்தாள். தன்ன டக்கத்தோடு சற்றே ஒதுங்கி, “வாருங்கள் அமருங் கள்.” என நாற்காலியைச் சுட்டிக்காட்டி வரவேற்றாள்.

“அப்பா இல்லையா?” என முகிலன் வினவினான்.

“அப்பாவும் ‘அவரும்’ திண்டிவனம் போயிருக் கின்றனர். அங்கே ‘அவருடைய தந்தையாருக்கு உடல் நலமில்லையென்று தொலைபேசி வழி செய்தி வந்தது.”

“புகழேந்தியின் அப்பாவுக்கா?...அ ட டா!... உம்...சரி. நான் உடனே திண்டிவனம் செல்ல வேண்டும். வருகிறேன்.” எனக் கூறிய முகிலன் செல்வியை ஒருமுறை நோக்கிவிட்டு வெளியேறலா னான். “ஏதேனும் செய்தி இருக்குமானால் இக்குறிப் பேட்டில் எழுதிக்கொடுங்கள். அவர்களிடம் சேர்க்க லாம்” எனக் குறிப்பேடும் எழுதுகோலும் எடுத்து நீட்டினாள்.

முகிலன், “ஒன்றுமில்லை. நேரில் பார்க்கவேண் டும். வருகிறேன்” எனக் கூறி விட்டு விரைந்தான்.

முகிலன் உள்ளம் குழம்பியது. அதில் இன்ப மும் துன்பமும் கட்டிப் பிடித்துருண்டன. ‘ஒப்பி லழகருக்குத் திடுமென நோய் மிகுந்து விட்டதோ? ...’ என எண்ணினான்.

‘செல்வி எப்பேற்பட்ட அழகி! முன் எப்போதும் இவளை நான் தெளிவாகப் பார்க்கவே இல்லையே! செல்வியைக் குறித்து என்னிடம் புகழேந்தி ‘ஒரு பேச்சு’ கூடப் பேசவே இல்லையே! ஏன்? அவள் வீட்டிலேயே தங்கி இருப்பவன் அவளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசாதது வழக்கத்திற்குமாறாக அன்றோ இருக்கின்றது! புகழேந்தி இவளை நிமிர்ந்தும் பார்க்கிறானோ; இல்லையோ? இவளும் இங்கு வந்தும் இவளை நான் வெளியே பார்க்கவே இயலவில்லையே! இங்கேயே இருக்கும் புகழேந்தி பார்த்து—பேச— வாய்ப்பின்றியா இருந்திருப்பான்? அறிவும் பண்பும் கமழக்கமழ அவள் கூறவந்த செய்தியைக் குறிப் பேட்டில் பொறிக்க வேண்டிய பண்பாடு எவ்வளவு அருமையானது! நல்ல ஒழுக்க நெறிகளைத் தன் குடும்பத்தினருக்குப் பயிற்றியுள்ளார் அதியமான்! அறிவார்ந்த கட்டுப்பாடும் நெறியும் மிக்க சூழ்நிலை இக் குடும்பத்தில் நிலவுவதால் புகழேந்திக்கும் அப் பண்பு உண்டாகியிருக்கக்கூடும்...” என எண்ணி னான் முகிலன்.

‘இனி என்ன செய்வது?’ எனக் குழம்பிய முகிலன், ஒரு முடிவுக்கு வந்தான்.

**(வளரும்)**

---

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலங்கள் கரைந்தன.

ஒருநாள் பண்ணையார் படுத்த படுக்கையாக நோய்வாய்பட்டார். எத்தனையோ டாக்டர்கள் அவரை கவனிக்க. எதிலும் பலனில்லை. இறுதியில் அவர் இதயத்தில் புற்று நோய் ஏற்பட்டு இருக்கின் றது என்று டார்டர்கள் முடிவு கூறினர். நோய் சிறிது முத்தி விட்டு இருந்ததால் அறுவை சிகிச்சைக்கு பயந்தனர் டாக்டர் கள்.

இந்தியாவில் இருந்து வெளி நாட்டிற்கு சென்று படித்துவிட்டு இந்தியா திரும்புகிறார் ஒரு டாக்டர் என்பதை அறிந்ததும் அவரையே பயன்படுத்தினர் அறுவை சிகிச்சை செய்ய.

சிகிச்சையில் வெற்றியும் கிடைத்தது. தனக்கு உயிர் கொடுத்த டாக்டரைக் கண்டார் பண்ணையார். நம்பவே முடிய வில்லை. மலர்க்கொடியா? நம் வீட்டில் வேலை செய்து வந்த அம்புஜத்தின் மகளா இன்று என்னை காப்பாற்றியது? வெட்கப் பட்டார் பண்ணையார். இவள் எப்படி டாக்டருக்கு படித்தாள்?

பண்ணையாரின் கேள்விக்கு ராஜா பதில் தந்தான். “நான் உதவி செய்ய முனைந்த பொழுது தான் மலர்க்கொடி தன் தாயைப் பிரிந்தாள். நம்மால்தானே இந்த நிலை என்று என் நெஞ்சை உறுத்திக் கொண்டு இருந்தது. அதன்பிறகு நான் படிப்பதாக நடித்துக் கொண்டு மலர்க் கொடியை நான்தான் படிக்க வைத்தேன். ஏழை என்பதனால் அவளுக்கு சலுகைகள் அதிகம் கிடைத்தன. வெளிநாட்டிற்கு அனுப்பி படிக்க வைத்தேன். இன்று என் தங்கை இல்லாத குறையையும் நீக்கி விட்டாள் மலர்க்கொடி. உடன் என் தந்தை யையும் காப்பாற்றி விட்டாள்.” என்று கூறி முடித்தான் ராஜா.

கேட்கும்பொழுதே பண்ணை யார் கண்களில் அன்புக் கண்ணீர் வழிந்து கொண்டு இருந்தது.

தன்னையே நம்பி வாழ்ந்த வேலைக்காரியின் குடும்பத்தை காப்பாற்ற வேண்டியது பண்ணை யாரின் கடமை. ஆனால் கடமையில் தவறினார்! அந்த கடமையை மகன் நிறைவேற்றினான்.

காளையரின் பார்வையில் கழுகுப் பார்வையே உண்டு என்று எண்ணிய பெண்களுக்கு விளக்கம் தருவது போல தன் கண்ணியத்தை கடைபிடித்தான்.

துன்பத்தின் கொடுமைகளைக் கண்டு துடிக்காமல் மனதை கட்டுப்பாடு என்ற எல்லைக்குள் நிறுத்தி செயல்படுத்தினான்.

இதை எல்லாம் நினைக்கும் போது பண்ணையார் மகனைக் கண்டு பூரித்தார். மகள் இல்லாத குறையையும் நீக்கி விட்டாள் மலர்க்கொடி.

மறுநாள் பண்ணையார் நிலங் களில் கட்டிடங்கள் எழும்ப ஆரம்பித்தன.

செல்வத்தை எல்லாம் அதில் கொட்டினார். முடிவில் “உழைப் பாளர் இல்லம்” என்ற இலவச மருத்துவமனை உருவாகியது. மலர்க்கொடி அதில் அன்னையைப் போல் திகழ்ந்தாள். உழைப்பவர் களின் உள்ளத்திற்கும் உடலுக் கும் உறுதியைக் கொடுத்தாள்.

தங்கையின் சேவையைக் கண்டு மகிழ்ந்தான் அண்ணன்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் கண்டு கொண்டு இருந்தார் பண்ணை யார்! எனக்கும் இதயம் உண்டு என்று தானாகவே அவர் வாய் முணுமுணுத்துக் கொண்டு இருந் தது.

“கடவுளே! இந்த நல்லவர்கள் வாழட்டும்” என்று மலர்க்கொடி யின் உள்ளம் எங்கியது.




**பன்னிரண்டு ஆண்டுகளில்**
**வருவாய் இரட்டிப்பாகிட**
**தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்**

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம்:—
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,